CHENNAI
திங்கள், மார்ச் 25, 2024 3 இந்து தமிழ் திசை

## கர்மயோகி பாரத் திட்டத்தில்

# ஜிப்மர் முன்னோடி நிறுவனமாக அங்கீகரிப்பு

புதுச்சேரி

மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ், கர்ம யோகி பாரத் திட்டத்தில் நிர்வாகத்திலும், திறன் மேம்பாட்டிலும் சிறந்து விளங்கும் 3 நிறுவனங்களின் ஒன்றாக ஜிப்மர் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் நடந்த தேசிய சுகாதாரம் குடும்ப நல அமைச்சகத்தில் அண்மையில் நடந்த கூட்டத்தில் இதற்கான பாராட்டு ஜிப்மர் நிறுவனத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

ஜிப்மர் கர்ம யோகி பாரத் திட்டத்தின் நோடல் அதிகாரி ஹவா சிங், ஜிப்மரில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை பட்டியலிட்டார். எதிர்காலத்தில் ஜிப்மர், பாடநெறி வழங்கும் நிறுவனமாக மாறுவதற்கான விருப்பத்தையும் தெரிவித்துள்ளார்.

கர்மயோகி திட்டம் என்பது பொதுசேவைகளில் திறன் மேம்பாட்டுக்கான தேசிய திட்டமாகும். இது இந்திய நெறிமுறை சேவையை உருவாக்கு வதை நோக்கமாக கொண்டுள்ளது.